செய்தி வெளியீடு எண். 57-2017 நாள்: 21.07.2017

**விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெற்றி, மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்ற வீரர் வீராங்களைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விழுப்புரம் மாவட்டத்தில் ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017 வரையிலான காலங்களில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கம் பெற்ற வீரர்/ வீராங்கனைகளுக்கு கீழ்க்கண்ட விபரங்கள்படி விளையாட்டு உபகரணங்கள் வாங்கி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் தங்கப்பதக்கம் வென்றவருக்கு ரூ.6000/- மதிப்பிலான Track suit 1 set, T-Shirt 2nos, Shorts 2nos, Warm-Up shoes and socks 1 Pair each, வெள்ளிப் பதக்கம் வென்றவருக்கு ரூ.4000/- மதிப்பிலான Track suit 1 set, T-Shirt 1nos, Shorts 1nos, Warm-Up shoes and socks 1 Pair each, வெண்கலப் பதக்கம் வென்றவருக்கு ரூ.2000/- மதிப்பிலான Track suit 1 set, Warm-Up shoes and socks 1 Pair each.

எனவே பதக்கம் பெற்ற வீரர் வீராங்கனைகளின் பெயர், முழு முகவரி, சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல் ஆகிய விவரங்களுடன் நேரில் 27.07.2017 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.